**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

07.10.2025

O.S. No. 147/2021

D.W. 1 திரு.மணிகண்டன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காசோலைக்கு முன்னால் வாதியுடன் வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் உண்டா என்றால் கிடையாது. நான் வாதியிடம் கடன் கேட்பதற்கு எந்த தேதியில் போனேன் என்றால் நான் கடன் கேட்கவே போகவில்லை. யார் யார் போனது என்றால் லிங்கேஸ்வரன் போனார். அவருடன் போனேனா என்றால் இல்லை. அவர் எந்த தேதியில் கடன் கேட்க போனார் என்றால் அது எனக்கு தெரியாது. எந்த தேதியில் நான் காசோலையை வாதியிடம் கொடுத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. வாதியுடைய கிளினிக்கில் வைத்துதான் கொடுத்தேனா என்றால் ஆமாம். அவருடைய கிளினிக்கிற்கும், என்னுடைய வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்எ ன்றால் 1 ½ கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். என்னுடைய செல் நம்பர் என்ன என்றால் 9789172559. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள அலைபேசி எண் என்னுடையதுதான். அந்த போட்டோ என்ன போட்டோ என்றால் என்னுடைய வீட்டிற்கு முன்னர் நான் வைத்துள்ள போர்டை போட்டோ எடுத்துள்ளார்கள். நான் ரியல்எஸ்டேட் தொழில்

செய்து வருகிறேன். அதற்காக அந்த போர்ட்டை வைத்துள்ளேன். **அந்த ஆவணம் வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **வா.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த ஆவணத்தில் ரூபாய் 3,50,000/- நான் வாங்கியதாக என் கைப்பட எழுதி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது 18.01.2018 தேதியில் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அந்த ஆவணம் வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனக்கு ரியல் எஸ்டேட் தொழிலும், ரியல் எஸ்டேட் புரோக்கர் தொழிலும் தவிர ஆட்டோ ஓட்டுவதும் தொழில் என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுகிறேன். ரியல் எஸ்டேட் தரகு இருந்தால் செய்வேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு வாதியிடம் ரூபாய் 1,30,000/- கடன் கேட்டு, அவர் அதை காசோலையாக கொடுத்து நான் மருங்கூர் IOB வங்கியில் செலுத்தி பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு காசோலை பெற்று அதன் மூலம் பணம் பெற்றுள்ளேன் என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள கடனை பெறுவதற்கு வாதி கிளினிக்கிற்கு போனேனா என்றால் இல்லை. காசோலையில் உள்ள தொகையை கேட்பதற்காகவோ, அல்லது அந்த தொகையை பெறுவதற்காகவோ நான் வாதி கிளினிக்கிற்கு போகவே இல்லையா என்றால் போகவில்லை. லிங்கேஸ்வரன் பணம் கேட்டார், அவருக்கு சொன்னேன். வாதி எனக்கு காசோலை தொகையை கேட்டு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பில்

நான் வாதியிடம் கடன் கேட்டு செல்லவில்லை என்றோ பணம் பெறவில்லை என்றோ கூறவில்லை என்றால் சரிதான். அந்த விவரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், இப்போது தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையை எங்கு வைத்து வாதிக்கு கொடுத்தேன் என்றால் அவருடைய கிளினிக்கில் வைத்து கொடுத்தேன், அப்போது என்னுடன் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. அவருடைய கிளினிக்கில் மருந்து கொடுப்பதற்காக ஒரு அறையும், ஊசி போடுவதற்கும், மருந்து கட்டுவதற்கும் ஒரு அறை, ஒரு மெடிக்கல் ஷாப், ஆகியது உள்ளது. அவற்றை தாண்டிதான் வாதியின் கிளினிக்கின் தனி அறை உள்ளது என்றால் சரிதான். கிளினிக்கிலிருந்து பார்த்தால் வெளியே நடப்பது தெரியாது என்றால் சரிதான். லிங்கேஸ்வரன் எனது உறவினரா என்றால் அவர் எனது ஊர்க்காரர், பக்கத்து வீட்டுக்காரர். வாதிக்கும் எனது ஊர்தான் என்றால் சரிதான். வாதியின் கிளினிக்கிற்கு எத்தனை முறை போயுள்ளேன் என்றால் பலமுறை போயுள்ளேன். ரியல் எஸ்டேட் தொழிலுக்காக சொத்தை வாங்கி விற்பதற்கு எனக்கு அடிக்கடி பணம் தேவைப்படும் என்றாலும் அதனால் வாதியிடம் பணம் பெறுவேன் என்றாலும் சரியல்ல. இதுவரையில் நான் எந்த சொத்தையும் வாங்கியதும் இல்லை, விற்றதும் இல்லை. தரகு வேலை மட்டும்தான் பார்ப்பேன். சொத்திற்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு அந்த சொத்தை வேறு பார்ட்டியிடம் கைமாற்றி விடுவேன் என்றால் சரியல்ல. அப்படிதான் ரியல் எஸ்டேட் தொழிலுக்காக தேவைப்பட்ட ரூபாய் 17,00,000/-த்தையும் வாதியிடமிருந்து இந்த வழக்கு காசோலை கொடுத்து கடனாக

பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. லிங்கேஸ்வரன் என்பவருக்கு S.M. School, மற்றும் அப்டா மார்கெட்டில் காய்கறி கடை மேலும் S.M. திருமண மண்டபம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். லிங்கேஸ்வரனுக்கு என்ன தொழில் என்றால் School, காய்கறி கடை, திருமண மண்டபம் ஆகியவற்றை கவனித்துக் கொள்வார். வாதியுடன் எவ்வளவு காலமாக பழக்கம் என்றால் சவாரி போவதில் 20 வருடம் பழக்கம். வாதி நல்ல வசதியான ஆள் என்றால் அது எனக்கு தெரியாது. வாதிக்கு நிறைய நோயாளிகள் வருவது உண்டா என்றால் அவ்வளவு நோயாளிகள் வரமாட்டார்கள். அவர் MBBS Doctor இல்லை. வழக்கிற்காக அவருக்கு நோயாளிகள் அதிகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை கொடுத்து பணத்தை பெற்றுக்கொண்டு திருப்பி கொடுக்காமல் இருப்பதற்காக லிங்கேஸ்வரன் என்பவர் பெற்ற கடனுக்கு காசோலையை பிணயமாக கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு தாவா காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகையை திருப்பி கொடுக்க கடமை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்னரும் வாதியுடன் நிறைய கொடுக்கல் வாங்கல் இருந்துள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.